**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**CRIMINAL APPEAL NO. 28 OF 2024**
**Deposition of Witness for : DW. 2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அருணாச்சலம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | ------- |
| Calling | : | |
| Religion | : | ------- |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.01.2026

Appellant present.

**முதல் விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் வட்டார வளர்ச்சி அலுவலராக வேலை செய்தேன் என்றால் சரிதான். நானும், மேற்முறையீட்டாளர் ஆறுமுகமும் சிறுவயதில் இருந்தே நண்பர்கள் என்றால் சரிதான். நானும், ஆறுமுகமும் ஒரே ஊரில் பிறந்தோம் என்றால் சரியல்ல, நான் திருவண்ணாமலையில் பிறந்தேன் அவர் எங்கு பிறந்தார் என்று எனக்கு தெரியாது ஆனால் நாங்கள் இருவரும் ஒரே பள்ளியில் வெவ்வேறு வகுப்புகளில் படித்தோம். நானும், ஆறுமுகமும் போளூரில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். நான் எனது 23 வயது வரை வசித்தேன். எனக்கும் ஆறுமுகத்திற்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது வந்தது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக கொடுக்கல் வாங்கல் இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாரர் சுந்தர்ராஜனுக்கும் எவ்வளவு நாட்கள் பழக்கம் என்றால் சுமார் 29 வருடமாக ஒரே துறையில் பணிபுரிந்த

முறையில் பழக்கம். எனது மூலமாகத்தான் ஆறுமுகம் சுந்தர்ராஜனிடம் பழக்கம் ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரிதான். ஆறுமுகம் என்னிடம் வந்து சுந்தர்ராஜனிடம் கடன் வாங்கித் தருமாறு கேட்டாரா என்றால் ஆம் கேட்டார். எந்த தேதி, வருடம், மாதம் அவ்வாறு ஆறுமுகம் கேட்டார் என்றால் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு அவ்வாறு கேட்டார். U:/ 9,27,000/- சுந்தர்ராஜனிடம் இருந்து கடன் வாங்கித் தரச் சொல்லி என்னிடம் ஆறுமுகம் கேட்டாரா என்றால் இல்லை. மேற்படி ஆறுமுகம் கடன் கேட்ட விவரத்தை சுந்தர்ராஜன் என்னிடம் சொன்னாரா என்றால் பணம் கொடுக்கப் போவதற்கு முன்பு என்னிடம் சொன்னார். ஆறுமுகம் சுந்தர்ராஜனிடம் எதற்காக கடன் கோரினார் என சுந்தர்ராஜன் என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார், படிப்பு செலவிற்காகவும், குடும்ப அவசர செலவிற்காகவும் கடன் கேட்டதாக சொன்னார். சுந்தர்ராஜன் பணியில் இருந்த போது என்னை விட உயர் பதவியில் வேறு அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார். நான் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக யார் மீதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுந்தர்ராஜன் ஆறுமுகத்திற்கு கடன் கொடுக்கும் போது நான் ஆறுமுகம் வீட்டிற்கு போனேனா என்றால் வீட்டிற்குள் போகவில்லை, வெளியில் நின்று இருந்தேன். நானும், சுந்தர்ராஜனும் ஒரு நிகழ்ச்சிக்கு போகும் வழியில் சுந்தர்ராஜன் என்னை அழைத்து சென்றார், யாரும் என்னை குறிப்பிட்டு அழைக்கவில்லை. ஆறுமுகத்திடம் சுந்தர்ராஜன் கடன் தொகையை என் முன்னிலையில் வைத்து கொடுத்தாரா என்றால் இல்லை, நான் வீட்டிற்கு வெளியில் நின்று இருந்தேன். ஆறுமுகம் எனக்கு 13.02.2023 தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் ஆறுமுகம் என்னிடம் கடன் வாங்கியதாகவும், அதற்காக 2 காசோலைகளை கொடுத்ததாகவும், சொல்லப்பட்டு இருந்தது என்றால் சரிதான், ஆனால் அது பொய்யான சங்கதி ஆகும். மேற்படி கொடுக்கப்பட்ட 2 காசோலைகளில் ஒன்று தான் இந்த வழக்கில் சம்மந்தப்பட்டது என்றால் சரியல்ல. மேலும் அறிவிப்பில் என்னிடம் வாங்கிய பணத்தை செலுத்திவிட்டதாகவும், அதற்காக அவர் கொடுத்த காசோலைகளை திரும்ப தரும்மாறு என்னிடம் கோரியிருந்ததாக கண்டுள்ளது என்றால்

சரிதான். ஆனால் அது தவறான சங்கதி ஆகும். ஆகவே, நான் அது குறித்து அவருக்கு பதில் அறிவிப்பும் அனுப்பிவிட்டேன். மேற்படி நான் 01.03.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் நான் கொடுத்த பதில் அறிவிப்பில் சுந்தர்ராஜன் என் முன்னிலையில் வைத்து ஆறுமுகத்திற்கு பணத்தை கொடுத்ததாக குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நான் கொடுத்த பதில் அறிவிப்பில் சுந்தர்ராஜன் ஆறுமுகத்திற்கு பணத்தை என் முன்னிலையில் கொடுத்துள்ளார் என நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காசோலையை யார் பூர்த்தி செய்தது என்று கேட்டால் ஆறுமுகம் பூர்த்தி செய்து கொடுத்ததை சுந்தர்ராஜன் வாங்கி வந்தார். காசோலையை பூர்த்தி செய்த போது யார் யார் அங்கு இருந்தது என்றால் நான் உள்ளே செல்லவில்லை, வெளியே நான் மட்டும் தான் இருந்தேன், வேறு யாரும் இல்லை. அவ்வாறு காசோலையை பூர்த்தி செய்து பெற்ற போது பகல் சுமார் காலை 11.30 முதல் 12 மணி வரை இருக்கும். அவ்வாறு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் 14.08.2022ந் தேதி நான் எங்கு பணியில் இருந்தேன் என்றால் கீழ்பென்னாத்தூரில் பி.டி.ஓ வாக பணியில் இருந்தேன். அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் நான் விடுமுறையில் இருந்தேன். சுப்பிரமணி குமாரர் ஜெகதீசன் என்பவர் போளூரை சேர்ந்தவர் என்றும் அவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் போளூரில் பி.டி.ஓவாக பணிபுரிந்த போது ஜெகதீசன் என்பவர் போட்டோ ஸ்டியோ நடத்தி வந்தார். நான் பி,டி.ஓ வாக இருந்த சமயத்தில் தேர்தல் நடவடிக்கையின் போது மேற்படி ஜெகதீசனுக்கு புகைப்படம் எடுக்கும் பணியை கொடுத்தேன் என்றால் அவருக்கும் மற்ற புகைப்படம் எடும் நபர்களுக்கும் பணியை கொடுத்தேன். என்னுடைய துண்டுதலின் பேரில் மேற்படி ஜெகதீசன் ஆறுமுகத்திற்கு எதிராக போளூரில் U:/ 8,91,000/- க்கு ஒரு காசோலை வழக்கு போட்டார் என்றும் அந்த காசோலை இந்த வழக்கு காசோலைக்கு அடுத்த எண் கொண்ட காசோலை என்றால் எனது துண்டுதலின் பேரில் வழக்கு போடவில்லை, ஆனால் அவ்வாறு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால் இந்த வழக்கு காசோலையின் வரிசை எண்ணுக்கு அடுத்த எண் காசோலை தான் அந்த

வழக்கில் போடப்பட்டுள்ளது என்று ஆறுமுகம் எனக்கு கொடுத்த அறிவிப்பிலேயே குறிப்பிட்டு சொல்லியுள்ளார். சுந்தர்ராஜன் தனக்கு எதிராக வழக்கு போட்டுள்ளார் என்றும், ஆகவே அந்த வழக்கில் ஆறுமுகத்திற்கு ஆதரவாக என்னை சாட்சியம் அளிக்க சொன்னார் என்றும், அதற்கு நான் மறுப்பு தெரிவித்தேன் என்றும் என்னுடைய பதில் அறிவிப்பின் 2ம் பத்தியில் சொல்லியுள்ளேன். ஜனவரி மாதம் 2023 வருடத்தில் அவ்வாறு ஆறுமுகம் என்னிடம் கேட்டார். நான் சொல்வது போது ஆறுமுகம் என்னிடம் கேட்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சுந்தர்ராஜன் இந்த வழக்கில் என்னுடைய பதில் அறிவிப்பில் சொன்ன விவரத்தை அடிப்படையாக கொண்டு விசாரணை நீதிமன்றத்தில் பிரிவு 143 NI Actல் ஒரு மனு செய்தார் என்றும் அது தள்ளபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆறுமுகம் என்னிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றும், ஆறுமுகம் வங்கி கணக்கு Account Closed என ஆகிவிட்ட விவரம் எனக்கு தெரியும் என்றும், இருப்பினும் வேண்டுமென்றே நான் கூறியதன் பேரில் சுந்தர்ராஜன் இந்த வழக்கை ஆறுமுகத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானும், சுந்தர்ராஜனும் கூட்டு சதி செய்து தான் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆறுமுகம் என்னிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றும், அவர் கடன் வாங்கும் போது கொடுத்த காசோலைகளை திருப்பி கேட்டார் என்றும், ஆனால் நான் காசோலைகளை தேடித்தருவதாக சொல்லிவிட்டு பிறகு சுந்தர்ராஜனையும், ஜெகதீசனையும் தூண்டிவிட்டு போளூரில் ஒரு வழக்கையும், இந்த வழக்கையும் தாக்கல் செய்ய வைத்தேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் நீதிமன்றத்தில் நான் வழக்கு போடாமல் என்னுடைய துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களை வைத்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** -

14.08.2022ந் தேதி நான் சுந்தர்ராஜனுடன் ஒரு நிகழ்ச்சிக்காக போய்க்கொண்டு இருந்தேன். அப்போது அவர் ரொக்கமாக பணம் வைத்திருந்தார். அவர் வாகனத்தின் பாக்ஸில் வைத்து இருந்தார். ஆறுமுகம் வீட்டில் இருந்து வெளியே வந்த போது சுந்தர்ராஜன் வெறும் கையோடு தான் வந்தார். ஒரே ஒரு காசோலை கொடுத்ததாக சுந்தர்ராஜன் என்னிடம் சொன்னார்.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,

TIRUVANNAMALAI.

05.01.2026 CRIMINAL APPEAL **எண். 28 /2024 PW. 1 சாட்சி சுந்தர்ராஜன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய வாக்குமூலம் செய்யப்பட்டு மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பு வழக்கறிஞரால் விசாரணை-**

நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் 01.01.2021 முதல் 14.08.2022 வரையிலான என்னுடைய வங்கி ஓய்வூதிய வங்கி கணக்கு பட்டியலை ஆஜர் படுத்துமாறு கேட்கப்பட்டு இருந்தது அதனை ஆஜர் செய்கிறேன் அது எ.ம.சா.2. என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ1 வங்கி கணக்கு புத்தகமானது என்னுடையதுதான். எ.ம.சா.ஆ.2 ன் படி எனக்கு பிடித்தம் போக மாதம் ரூ. 28 ஆயிரம் முதல் 33 ஆயிரம் வரை பென்ஷன் வருவதாக கண்டுள்ளது. நான் என்னுடைய ஓய்வூதியத்தை அடிப்படையாகக் கொண்டு எந்த ஒரு கடனையும் வாங்கவில்லை. எனது சேமிப்பு வங்கி கணக்கிலும், பென்ஷன் வங்கி கணக்கிலும் உள்ள பணவரவை வைத்து பார்க்கும் போது கடன் கொடுக்கும் அளவிற்கு வருவாய் இல்லை என தெரிகிறது என்றால் சரியல்ல. நான் என்னுடைய சேமிப்பு வங்கி கணக்கில் என்னுடைய ஓய்வூதிய வருவாயை வைத்து கடன் பெற்றுள்ளேன் என்றும், ஆகவே எனக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு போதிய நிதி ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.